**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.145/2024**
**Prosecution Witness - PW1**

| | |
|---|---|
| Name | : திரு. ஜெபராஜ் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.01.2026.
(Accused absent. Petition U/s.355 BNSS is filed and allowed).
<u>முதல் விசாரணை</u>–

நான் நெய்யூரில் வசிக்கிறேன். நான் சமூக சேவகர் பணியில் இருக்கிறேன். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. இன்று ஆஜர் இல்லாத எதிரி சேர்மராஜ் என்பரை எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். காவல் நிலையத்தில் என்னை கூப்பிட்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1. புகாரில் உள்ள விபரங்கள் பற்றி எனக்குத் தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)</u>

கடந்த 29.12.2021 அன்று பகல் 1.00 மணியளவில் திங்கள் நகரில் இருந்து அழகியமண்டபம் செல்லும் ரோட்டில் ஹாக்கர் தெரு திருப்பு அருகில் நான் நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது TN 75 E 1696 என்ற honda activa இருச்சக்கர வாகனத்தில் வந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த விருதுநகர் அல்லம் பட்டி, மொட்டையன் சாமித் தெரு தற்சமயம் நெய்யூர் மலர் பேக்கரி காம்ப்ளக்சில் வசிக்கும் இராமகிருஷ்ணன் மகன் சேர்மராஜ் என்ற மதுரை சேர்மராஜ் என்னை வழி மறித்து அவனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கள்ள துப்பாக்கியை எடுத்து என்னை பார்த்து உயர்த்தி காட்டி இதன் உள்ளே குண்டு நிரப்பி வைத்திருக்கிறேன். உன் பாக்கெட்டில் உள்ள பணத்தை எடு என்றான், நான் உயிருக்கு பயந்து அலறி சத்தம் போட்டேன். சம்பவத்தை பார்த்த அந்தோணி ராஜ் மகன் சுஜின் மற்றும் திங்கள் நகர் குழியூரை சேர்ந்த இஸ்மாயில் ஆகியோர் சத்தம் போட்டு ஓடி வரவும் சேர்மராஜா என்னை காப்பாற்ற வந்தவர்களை சுட்டு கொன்று விடுவேன் என மிரட்டி மரண பயத்தை

ஏற்படுத்தவும், காப்பாற்ற வந்தவர்கள் நாலாப்புறமும் சிதறி ஓடினார்கள். எதிரி எனது சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.1500/— கொள்ளையடித்து விட்டு கள்ள துப்பாக்கியுடன் அவன் வந்த இருச்சக்கர வாகனத்தில் சென்று விட்டான். நான் இரணியல் காவல் நிலையம் சென்று நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். அதன் பின்பு இரவு 8.45 மணியளவில் நான் வீட்டில் இருக்கும் போது என்னை மிரட்டி பணத்தை கொள்ளையடித்த நபரை இரணியல் காவல் நிலையத்தில் பிடித்து வைத்திருப்பதாக காவல் நிலையத்திலிருந்து தகவல் சொன்னதன் அடிப்படையில் காவல் நிலையம் சென்று என்னை மிரட்டிய நபரையும், கைத்துப்பாக்கியையும் அடையாளம் காட்டினேன். மேலும் நெய்யூர் மலர் பேக்கரி காம்ப்ளக்சில் குடியிருந்து வந்ததாகவும், வேறு பெரிய வீச்சருவாக்கள் வீட்டில் மறைத்து வைத்திருப்பதாகவும், கேள்விப்பட்டேன் என போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு சாதகமாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**